b) Members whose name is recorded in the Register of Members or in the register of beneficial owners maintained by the depositories as on the Cut-off date only shall be entitled to avail the facility of remote e-voting / e-voting during the AGM, as the case may be. Once the vote on a resolution is cast by the member, he / she shall not be allowed to change it subsequently. The members who have not cast their vote electronically, and are otherwise not barred from doing so, can exercise their voting rights through the e-voting system during the AGM. The Company will make necessary arrangements for e-voting during the AGM. Members who have cast their votes by remote e-voting prior to the meeting may also attend the AGM but they are not entitled to cast their vote again during the AGM.

c) Members who would like to express their views/ ask questions as a speaker at the meeting may pre-register themselves by sending a request from their registered e-mail address mentioning their names, DP ID and Client ID/ folio number, PAN and mobile number to the Company at email Id **companysecretary@keralaayurveda.biz** on or before September 18, 2026. Only those members who have pre-registered themselves as a speaker will be allowed to express their views/ask questions during the AGM. The Company reserves the right to restrict the number of speakers depending on the availability of time for the AGM.

d) The instructions for attending the AGM through VC / OAVM and the manner of e-voting is provided in the Notice convening the AGM for Members who have registered their e-mail address as also for those Members who hold shares in physical form or who have not registered their e-mail address.

CS Pramod S M or in his absence CS Biswajit Ghosh, partners of M/s. BMP & Co. LLP, a Practicing Company Secretary firm, Bengaluru, has been appointed as Scrutinizer to scrutinize the remote e-voting process before/ during the AGM in a fair and transparent Manner.

For any query / clarification / grievance connected with VC Meeting, remote e-voting and Members who acquired shares of the Company after the date of dispatch of AGM notice and hold shares as of the cut-off date may obtain the User ID and Password by following aforementioned steps or may write an E-mail to the Company at email ID **info@keralaayurveda** .com or to **helpdesk.evoting@cdslindia.com** or call toll free no. 1800 21 09911

By Order of the Board of Directors
For Kerala Ayurveda Limited
Sd/-
Binu Thomas
Company Secretary and Compliance Officer
M No.: F11208

Place: Athani (Ernakulam)
Date: September 06, 2026

82 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருது: ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்

புதுடெல்லி, செப்.6– தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உள்பட 82 ஆசிரியர்களுக்கு தேசிய நல்லாசிரியர் விருதை ஜனாதிபதி திரவுபதி முர்மு, டெல்லியில் நேற்று நடைபெற்ற விழாவில் வழங்கினார்.

இந்தியாவின் 2வது ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5ந் தேதி தேசிய ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பள்ளி, உயர் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை களைச் சேர்ந்த சிறந்த ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படுகிறது.

அதன்படி 2026ம் ஆண்டுக்காக பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையில் இருந்து 48 ஆசிரியர்கள் தேர்ந்து எடுக்கப் பட்டனர். இவர்களில் 22 பேர் ஆசிரியைகள். இதுபோல உயர் கல்வித்துறையில் இருந்து 21 பேரும், திறன் மேம்பாட்டு துறையில் இருந்து 13 பேருமாக மொத்தம் 82 பேர் விருதுக்கு தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

டெல்லி விஞ்ஞான பவனில் நேற்று நடைபெற்ற விழாவில், ஜனாதிபதி திரவுபதி முர்மு இவர்களுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய கல்வித்துறை மந்திரி பிரகலாத் ஜோஷி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில்ஜனாதிபதிதிரவுபதி முர்மு பேசுகையில், "தங்கள் ஆசிரியர்களை மதிக்கும் ஒரு சமூகமே ஒரு முற்போக்கான சமூகம். அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களே தேசத்தை முன்னின்று கட்டியெழுப்புபவர்கள்.

ஆசிரியர்கள் மாணவர்களை தங்கள் சொந்த பிள்ளைகளைப் போல பாவிக்க வேண்டும். அவர்களை நல்ல மனிதர் களாக வழி நடத்துவதே ஆசிரியர்களின் புனிதமான கடமை. மாணவர்களின் அச்சத்தையும், பதற்றத்தையும் உருவாக்குவதோ, அவர்களது மன உறுதியை குலைப்பதோ, தாழ்வு மனப்பான்மையை உருவாக்குவதோ ஆசிரியர்களிடம் இருக்கக் கூடாது" என்று கூறினார். முன்னதாக அவர் ஜனாதிபதி மாளிகையில் ராதாகிருஷ்ணன் உருவப்படத்துக்கு மரியாதை செலுத்தினார்.

பள்ளி கல்வித்துறைக்கான தேசிய நல்லாசிரியர் விருதை தமிழ்நாட்டில் இருந்து புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் எம்.தங்கராஜ் மற்றும் மதுரை கேந்திரிய வித்யாலயா ஆசிரியை ஜே.அமுதா ஆகியோர் பெற்றனர்.

இதுபோல புதுச்சேரியில் இருந்து மேட்டுப்பாளையம் சீனுவாசன் அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் எஸ். கணேசன் பெற்றார்.

இதுபோல உயர்கல்வித்துறையில் கோவை தனியார் பாலிடெக்னிக் கல்லூரி பேராசிரியை சசிகலா, ஈரோடு தனியார் பாலிடெக்னிக் கல்லூரி பேராசிரியர் கண்ணன் ரத்தினம் ஆகியோருக்கும் விருது கிடைத்து உள்ளது.

உடன்குடி அனல் மின் நிலையத்தில் அலகு 1ல் 660 மெகாவாட் முழு மின் உற்பத்தியை எட்டி சாதனை

சென்னை, செப்.6 தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி அனல் மின் நிலைய திட்டம் (2X660 மெகாவாட்) அலகு 1ல் வணிக ரீதியாக 660 மெகாவாட் முழு மின் உற்பத்தியை எட்டி சாதனை படைக்கப்பட்டு உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் ரூ.13 ஆயிரத்து 76 கோடி மதிப்பீட்டில் தலா 660 மெகாவாட் திறன் கொண்ட 2 அலகுகளுடன் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. 13.03.2026 அன்று உடன்குடி மிக உய்ய அனல் மின்நிலையம் (2X660 மெகாவாட்) அலகு 1ல் கடந்த மார்ச் 13ந் தேதி மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. இந்த அலகில் தின சரி சுமார் 300 முதல் 400 மெகாவாட் வரை மின் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.

உடன்குடி அனல் மின்நிலையத்தில் அலகு 1ல் வணிக ரீதியான 660 மெகாவாட் முழு மின் உற்பத்தியை விரைவில் கொண்டு வர முதல்அமைச்சர் விஜய் உத்தரவிட்டார். அதன்அடிப்படையில் உடன்குடி அனல் மின் நிலையம் அலகு 1ல் வணிக ரீதியான முழு மின் உற்பத்தி அடைய பல்வேறு சோதனை ஓட்டங்கள் நடத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து அலகு 1ல் வணிக ரீதியான சோதனை உற்பத்திக்கான தொடர் முழு உற்பத்தி திறன் ஆய்வு சோதனை ஓட்டம் கடந்த 2ந் தேதி (நேற்று) மாலை 4.16 மணி முதல் 5ந் தேதி (நேற்று) மாலை 4.15 வரை வெற்றிகரமாக நடத் தப்பட்டு தொடர்ச்சியாக 72 மணி நேரம் முழு உற்பத்தியான 660 மெகாவாட் மின் உற்பத்தி செய்து சாதனை படைத்தது.

இந்த சாதனை மைல் கல்லை தொடர்ந்து, இந்த அனல் மின் நிலையம் அலகு 1ல் நேற்று மாலை முதல் 660 மெகா வாட்டுக்கு மேல் வணிக ரீதியாக முழு மின் உற்பத்திக்கு கொண்டுவரப்பட்டது. மேலும், உடன்குடி அனல் மின் நிலையம் அலகு2ல் (660 மெகாவாட்) கட்டுமான வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகிறது. விரைவில் மின் உற்பத்தி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மின்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் இந்த வணிக ரீதியான முழு மின்உற்பத்தி மைல் கல்லை எட்ட இரவு பகலாக அயராது உழைத்த தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் வி.அருண்ராய், தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குனர் எம்.கோவிந்தராவ், இயக்குனர் (திட்டங்கள்) எம்.சேதுராமன், உடன்குடி தலைமைப் பொறியாளர் (பொறுப்பு), கே.ராஜகுமார் மற்றும் அனைத்து பொறியாளர்கள், பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் களுக்கு பாராட்டுகளை தெரிவித்து கொண்டார். மேலும், எதிர்வரும் மின்தேவையை பூர்த்தி செய்ய இந்த அனல் மின் நிலைய மின் உற்பத்தி மிக முக்கிய பங்காற்றும்.

17–ந்தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: 12 நிபந்தனைகளுடன் அனுமதி

மதுரை, செப்.6 மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழாவுக்கு 12 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா வருகிற 17ந் தேதி நடக்கிறது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. நேற்று முன்தினம் சுந்தரேசுவரர் சன்னதி உட்புறத்தில் உள்ள மரக்கதவுக்கு வெள்ளி தகடுகள் பதிக்கும் பணி தொடங்கியது.

35 கிலோ 825 கிராம் வெள்ளியால் புதிய தகடுகள் செய்யப்பட்டு அந்த மரக்கதவில் பொருத்தப்படுகிறது.

இந்நிலையில் கும்பாபிஷேக விழா வுக்கு அறநிலையத்துறை தலைமை கமிஷனர் வினய், 12 நிபந்தனைகள் விதித்து அனுமதி வழங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளன. அந்த நிபந்தனை விவரம் வருமாறு:

கும்பாபிஷேக விழாவுக்கு நன்கொடை சீட்டுக்கள் அச்சடித்து பொதுமக்களிடம் வசூல் செய்யக்கூடாது. ஆனால் உபய மாக ஏற்பாடு செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. கோவில் நிதியில் இருந்து செலவிடுதல் கூடாது. கோவில் உபயதாரர்கள் முன்னுரிமை ஏதும் கோரக்கூடாது. யாகசாலை மற்றும் பந்தல் கட்டுமானங்கள் அமைத்திடும்போது தீப்பி டிக்காத தகர கூரை அமைத்து தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கும்பாபிஷேக சிற்ப சாஸ்திர விதிகள், கோவில் பழக்க வழக்கங்கள், ஆகமவிதிகள், இலாகா சட்ட விதிகள் மற்றும் பல் வேறு விதிகளுக்கு உட்பட்டு நடத்த வேண்டும். மின் அமைப்புகளை பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், மின்விபத்து ஏற்படாதவாறும் அமைத்தல் வேண்டும். பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதியும், பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

பந்தல், மின் அமைப்புகள் அமைக்கப்பட்டதற்கு உரிய சான்றுகள் பெறப்பட்டுக்கொள்ள வேண்டும். விழாவின்போது அசம்பாவித விதம் ஏதும் நேரிடாவண்ணம் பார்த்துக்கொள்ள தீயணைப்புத்துறையினரிடம் உரிய உதவிகளை பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேவைப்படும் நிலையில் 3ம் நபர் காப்பீடும் செய்தல் வேண்டும். பாதுகாப்பு பணிகளுக்காக உள்ளூர் காவல்துறை, ஊர்க்காவல் படையினர், தேசிய மாணவர் படையினர் உதவியை பெற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கும்பாபிஷேகத்தின்போது சாரத்தின் மீதும், விமானத்தின் மீதும் பக்தர்களை அனுமதிக்க கூடாது. யாக சாலை நடைபெறும்போது அதிகமான கூட்ட நெரிசல் இல்லாமலும், போதுமான இடைவெளிவிட்டு யாகங்களை நடத்திட வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

விமானங்கள் வாங்கியதில் ஊழல்: ராஜபக்சே மகன் கைது

கொழும்பு, செப்.6 'ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்' நிறுவனத்துக்காக, விமானங்கள் வாங்கியதில் ஊழல் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டில், நமல் ராஜபக்சே, (40) ஊழல் தடுப்பு ஆணையத்தால் கைது செய்யப்பட்டார்.

இலங்கையின் முன்னாள் அதிபரும், எதிர்கட்சி தலைவருமான மஹிந்த ராஜபக்சேயின் மூத்த மகன் நமல் ராஜபக்சே. இவர் தன் தந்தையின் ஆட்சி நடந்த 2013ல், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்காக ஏர்பஸ் விமானங்கள் வாங்கியதில், பல்வேறு வங்கி கணக்குகள் வாயிலாக 7.52 கோடி ரூபாய் வரை கமிஷன் பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுகுறித்து விசாரிக்க இலங்கையின் லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு களை விசாரிக்கும் ஆணையம் நமல் ராஜபக்சேவை விசார ணைக்கு அழைத்திருந்தது. அவரிடம் ஐந்து மணி நேரத்துக்கும் மேலாக விசாரணை நடத்தப்பட்டது.

அதன் பின் நமல் கைது செய்யப்பட்டு கொழும்பு மாஜிஸ்திரேட் அசாங்க எஸ். போதேரகம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். வருகிற 18ம் தேதி வரை அவரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தானை சேர்ந்த பயங்கரவாதி சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், செப்.6– ஜம்மு காஷ்மீரில் லஷ்கர்இதொய்பா பயங்கரவாத அமைப்பின் முக்கிய நபரை பாதுகாப்பு படை யினர் என்கவுண்டரில் சுட்டுக் கொன்றனர். மத்திய காஷ் மீரின் யூஸ்மார்க் பகுதியில் இந்திய ராணுவம் மற்றும் ஜம்மு காஷ்மீர் போலீசார் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின் போது, சுட்டுக் கொல்லப்பட்ட லஷ்கர்இதொய்பா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி யாசிர் என்ற பாகிஸ்தான் நாட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளான். இவன் பூஞ்ச் பகுதியில் இந்திய விமானப்படை வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியது மற்றும் 2024ம் ஆண்டில் ராணுவம் மற்றும் பொதுப்பணித் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய வழக்குகளில் தொடர்புடையவன்.

ரேபிட் மல்டிமோடல் லாஜிஸ்டிக்ஸ் பிரைவேட் லிமிடெட்

CIN: L63030TN2020PLC136171

பதிவு அலுவலகம்: புதிய எண்.44, பழைய எண்.78, ஷ்ராஃப் ஆர்சர்ட்ஸ், சென்னை 600010, தமிழ்நாடு, இந்தியா I

தொலைபேசி எண்: +91 044264 40181

E-mail: info@rapidlogistics.in I Website: www.rapidlogistics.in

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்களிப்பு குறித்த தகவல்

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் SEBI (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவை விதிமுறைகள்), 2015ன் அனைத்து பொருந்தக்கூடிய விதிகளுக்கும் இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகத்தை பரிவர்த்தனை செய்ய ரேபிட் மல்டிமோடல் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட் உறுப்பினர்களின் **6வது வருடாந்திர பொதுக் கூட்டம் செப்டம்பர் 29, 2026 செவ்வாய்க்கிழமை காலை 11:00 மணிக்கு,** புதிய எண்.44, பழைய எண்.78, ஷ்ராஃப் ஆர்சர்ட்ஸ், சென்னை – 600010, தமிழ்நாடு, இந்தியா என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் நடைபெற உள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனம்/பதிவாளர் & பங்குகள் பரிமாற்ற முகவர் (RTA) அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர் (DP) ஆகியோரிடம் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் 2025–2026 நிதியாண்டிற்கான வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் நிதிநிலை அறிக்கைகள், வாரிய அறிக்கை, தணிக்கையாளரின் அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய பிற ஆவணங்கள் (ஒட்டுமொத்தமாக "ஆண்டு அறிக்கை" என்று குறிப்பிடப்படுகிறது) மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன, மேலும் மின்னஞ்சல் முகவரி பதிவு செய்யப்படாத உறுப்பினர்களுக்கு அத்தகைய அறிவிப்பு அச்சு வடிவில் அனுப்பப்பட்டுள்ளது. பிற ஆவணங்களுடன் மின்னணு முறையில் அறிவிப்பு அனுப்புதல் முறையாக முடிக்கப்பட்டுள்ளது, மேலும் இது நிறுவனத்தின் இணைய தளத்திலும் மற்றும் பிஎஸ்இ (BSE) இணையதளத்திலும், அதாவது **www.bsesme.com**–லும் கிடைக்கும்.

சட்டத்தின் பிரிவு 108ன் விதிகள் மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாக விதிகள்), 2014ன் விதி 20 மற்றும் SEBI விதிமுறைகள் 2015ன் (பட்டியல் கடமைகள் & வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறை 44 மற்றும் பொதுக் கூட்டத்தில் செயலக தரநிலைகள் (SS–2) ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களிலும் வாக்களிக்க அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை ('தொலைதூர மின்னணு வாக்களிப்பு') வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது. கூடுதலாக, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் (AGM) போது மின்னணு வாக்குப்பதிவு (e–voting) மூலம் வாக்களிக்க நிறுவனம் வசதி செய்து தருகிறது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பான நடைமுறை/வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

கட்ஆஃப் தேதியின்படி, அதாவது, செப்டம்பர் 22, 2026 செவ்வாய்க்கிழமை அன்று, பங்குகளை காகித வடிவிலோ அல்லது மின்னணு வடிவிலோ வைத்திருக்கும் நிறுவனத்தின் உறுப்பினர்கள், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய தகுதியுடையவர்கள் அல்லது நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொண்டு வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க தகுதியுடையவர்கள். வாக்களிக்கும் உரிமைகள், கட்–ஆஃப் தேதியின்படி, செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனத்தில் அவர்களின் வைத்திருக்கும் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு காலம் சனிக்கிழமை, செப்டம்பர் 26, 2026 அன்று காலை 09:00 மணிக்குத் தொடங்கி, திங்கட்கிழமை, செப்டம்பர் 28, 2026 அன்று மாலை 05:00 மணிக்கு முடிவடையும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் உறுப்பினராகும் எந்தவொரு நபரும் மற்றும் செப்டம்பர் 22, 2026 செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பங்குகளை வைத்திருப்பவர்கள், **info@rapidlogistics.in** என்ற முகவரிக்கு கோரிக்கையை அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து குறிப்புகளையும், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் இணைவதற்கான வழிமுறைகளையும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கும் முறையையும் கவனமாகப் படிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குழு உத்தரவின்படி
ரேபிட் மல்டிமோடல் லாஜிஸ்டிக்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
நேஹா சுக்லா
நிறுவன செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி
உறுப்பினர் எண். A54243

இடம்: சென்னை
தேதி: 05.09.2026

படிவம் B
பொது அறிவிப்பு

(நொடித்தல் மற்றும் இந்திய திவால் நிலை வாரியத்தின் (கலைப்பு நடைமுறைகள்) விதிமுறைகள் 2016–ன், விதி 12– ன் கீழ்)

நிலா லாஜிஸ்டிக்ஸ் எல்எல்பி– ன் பங்குதாரர்களின் கவனத்திற்கு

வ. எண்	தகவல்கள்	விவரங்கள்
1.	கார்ப்பரேட் கடனாளர் பெயர்	நிலா லாஜிஸ்டிக்ஸ் எல்எல்பி
2.	கார்ப்பரேட் கடனாளர் துவக்கத் தேதி	ஜூன் 15, 2017
3.	எந்த அதிகாரத்தின் கீழ் கார்ப்பரேட் கடனாளர் துவக்கம்/பதிவு	ஆர்.ஓ.சி (ROC) – சென்னை
4.	கார்ப்பரேட் கடனாளரின் நிறுவன அடையாள எண் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண்	AAJ–7243
5.	கார்ப்பரேட் கடனாளரின் பதிவு அலுவலக மற்றும் முதன்மை அலுவலக (வேறு ஏதேனும் இருப்பின்) முகவரி	பதிவு செய்யப்பட்ட முகவரி: 5/582/26, நேதாஜி நகர், 2வது தெரு, தூத்துக்குடி, மேலூர், தூத்துக்குடி–தமிழ்நாடு, இந்தியா 628002
6.	திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி	01.09.2026
7.	கார்ப்பரேட் கடனாளரின் கலைப்பு துவங்கும் தேதி	01.09.2026
8.	கலைப்பு அலுவலராக செயல்படும் திவால் தீர்மான நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண்	பெயர்: சஞ்சய் விஜய் ஜேஸ்வானி பதிவு எண்.: IBBI/IPA/–001/IP–P–02891/2024–2025/14432
9.	வாரியத்தில் பதிவு செய்துள்ளபடி கலைப்பு அலுவலரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	IBBI–யில் பதிவு செய்யப்பட்ட முகவரி: A–403, அட்லாண்டிஸ் பில்டிங், ஹிரநந்தானி கார்டன்ஸ், பவாய், மும்பை – 400076, மும்பை நகரம், மகாராஷ்டிரா, 400076 பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி: jeswanisanjay007@gmail.com
10.	தொடர்புக்கான தீர்மான நிபுணரின் முகவரி மற்றும் மின்னஞ்சல்	தொடர்புக்கான முகவரி: 410, 4வது தளம், புளூரோஸ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மெட்ரோ மால் மற்றும் டாடா பவர் பெட்ரோல் பம்ப் அருகில், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, போரிவலி கிழக்கு, மும்பை – 400066 தொடர்புக்கான மின்னஞ்சல் ஐடி: cirp.nila@gmail.com
11.	கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் கடைசி தேதி	15.09.2026

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை–I, நிலா லாஜிஸ்டிக்ஸ் எல்.எல்.பி நிறுவனத்தின் கலைப்பு நடவடிக்கையை 01.09.2026 அன்று தொடங்க உத்தரவிட்டுள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிலா லாஜிஸ்டிக்ஸ் எல்.எல்.பி நிறுவனத்தின் பங்குதாரர்கள், வ.எண். 10–க்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள முகவரி/ மின்னஞ்சலில் உள்ள கலைப்பாளரிடம், 15.09.2026 அன்று அல்லது அதற்குள் சான்றுடன் தங்கள் கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள்.

நிதி சார்ந்த கடன் வழங்கியவர்கள் தங்கள் கோரிக்கைகளை ஆதாரத்துடன் மின்னணு முறையின் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். மற்ற அனைத்து கடன் வழங்கியவர்களும் தங்கள் கோரிக்கைகளை ஆதாரத்துடன் நேரில், தபால் மூலமாக அல்லது மின்னணு முறையின் மூலம் சமர்ப்பிக்கலாம்.

தவறான அல்லது திசைதிருப்பும் கோரிக்கை ஆதாரங்களை சமர்ப்பிப்பது அபராதத்திற்கு உள்ளாகும்.

சஞ்சய் விஜய் ஜேஸ்வானி
(IBBI பதிவு எண். IBBI/IPA/–001/IP–P–02891/2024–2025/14432)
கலைப்பாளர் – நிலா லாஜிஸ்டிக்ஸ் எல்.எல்.பி
AFA செல்லுபடியாகும் காலம் ஜூன் 30, 2027 வரை
பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி : jeswanisanjay007@gmail.com
திட்ட மின்னஞ்சல் முகவரி : cirp.nila@gmail.com

தேதி: 06.09.2026
இடம்: மும்பை

இ–ஏல அறிவிப்பு

(சேதமடைந்த MS பொருட்கள் மட்டும் – ரேக்குகள், பஃப் பேனல் ஷீட்டுகள் மற்றும் பைப்புகளுக்கு)

M/s பரேக் இன்டெக்ரேடட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், **எண்–117, 3B, 3C, 3D, பத்மாவதி கார்டன், நூம்பல், திருவேற்காடு (PO), வேலப்பஞ்சாவடி, சென்னை–600077** நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 10 MT எடையுள்ள **சேதமடைந்த MS பொருட்களை (ரேக்குகள், பஃப் பேனல் ஷீட்டுகள் மற்றும் பைப்புகள் மட்டும்), கிலோ கணக்கில் "உள்ளது உள்ளபடியே" (As Is Where Is)** என்ற அடிப்படையில் அகற்றுவதற்கு, விருப்பமுள்ள வாங்குபவர்களிடமிருந்து இ–ஏலப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. இவற்றை திரு. ராஜு – 9910355611 அவர்களிடம் முன் அனுமதி பெற்று, 07/09/26 முதல் 12/09/26 வரை பார்வையிடலாம். இ–ஏலம் 14/09/26 அன்று நடைபெறும். இ–ஏலப் படிவங்களுக்கு, **செல்வி. குஷி அவர்களை மொபைல்:–** 9990857386 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

சால்வர் செட்டிலர்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஏலதாரர்கள்)

(முகவரி:– 203, 2வது தளம், உஷா கிரண் பில்டிங், ஆசாத்பூர் வணிக வளாகம், டெல்லி–110033

அல்லது **www.salvorsettlers.com** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும்.

இ – ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான **கடைசித் தேதி 14/09/2026 பகல் 12.30 மணிக்கு முன்.**

இ – ஏல அறிவிப்பு

M/s. வித்யா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான, தீயினால் பாதிக்கப்பட்ட/சேதமடைந்த **P&M / Trützschler Carding Machine – 803, Cyclone Machine** போன்றவை – **தோராயமான அளவு: மொத்த அடிப்படை முறையில் (18,230 கிலோ) மற்றும் MS ஸ்ட்ரக்சரல் ஸ்டீல் காலம்கள் / போஸ்ட்கள், இதர ஸ்டீல் பிராக்கெட்டுகள், பிளேட்டுகள், போல்ட்கள், சப்போர்ட்டுகள் போன்றவை – தோராயமான அளவு: மொத்த அடிப்படை முறையில் (22,000–26,000 கிலோ)** ஆகியவற்றை (மேலும் விவரங்களுக்கு, பங்கேற்புப் படிவத்தைப் பார்க்கவும்) முற்றிலும் "உள்ளது உள்ளபடியே" என்ற அடிப்படையில் அகற்றுவதற்காக விருப்பமுள்ள வாங்குபவர்களிடமிருந்து இ–ஏலப் படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட சேதமடைந்த பொருட்களை **திரு. கார்த்திக், மொபைல் எண்.** 9597787063 என்பவரிடம் முன் அனுமதி பெற்ற பின்னர், 06/09/26 முதல் 14/09/26 வரை M/s. வித்யா டெக்ஸ்டைல்ஸ், எண்: 549/3C, வலசுபாளையம் – பொங்கலூர் ரோடு, பொங்கலூர், திருப்பூர் தமிழ்நாடு – 641667 என்ற முகவரியில் பார்வையிடலாம். இ–ஏலம் 15/09/26 அன்று நடைபெறும். இ–ஏலப் படிவங்களுக்கு, **திரு. நீரஜ் சதானாவை மொபைல் –** 8434340000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

இ–ஆக்ஷன் இன்சைட்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஆக்ஷனீர்ஸ்)

(முகவரி:–148, 11வது தெரு, பக்ரா என்க்ளேவ், குருத்வாரா சாஹிப் மலோமஜ்ரா அருகில், பாட்டியாலா தாலுகா மற்றும் மாவட்டம், பஞ்சாப்– 147001. அல்லது மேலும் விவரங்களுக்கு எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்: **info@eauctionbharat.com**

இ–ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 14/09/2026 மாலை 05:00 மணிக்கு முன்.

OrchidPharma
— A Dhanuka Group Company —

ஆர்க்கிட் பார்மா லிமிடெட்

CIN : L24222TN1992PLC022994

பதிவு அலுவலகம்: மனை எண்கள். 121–128, 128A–133, 138–151, 159–164, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் 603110, தமிழ்நாடு, இந்தியா

Ph.+91-44-27444471-78, Website: www.orchidpharma.com

33வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20ன் கீழ் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டின் (கம்பெனி) உறுப்பினர்களுக்கான 33வது வருடாந்திர பொதுக் கூட்டம் (இனி "AGM" என்று குறிப்பிடப்படும்) **செவ்வாய்க்கிழமை செப்டம்பர் 29, 2026 அன்று பகல் 12.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொலி காட்சி /பிற ஒலி ஒளி வழிமுறைகள் ("VC"/"OAVM") மூலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் (எம்சிஏ) வெளியிட்ட முறையே செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 03/2025,செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 09/2024, செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட 10/2023, மே 5, 2020 தேதியிட்ட 20/2020, ஏப்ரல் 08, 2020 தேதியிட்ட 14/2020 மற்றும் ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட 17/2020 மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியாவினால் ("SEBI") வெளியிடப்பட்ட அக்டோபர் 03, 2024 தேதியிட்ட SEBI/HO/CFD/CFD-PoD-2/P/C111/2024/133 மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட பிற பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றின் படி. கம்பெனி அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் அல்லது வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னணு வழிமுறைகள் மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை அனுப்பப்பட்டுள்ளது. மின்னஞ்சல் முகவரியை அவ்வாறு பதிவு செய்யாதவர்களுக்கு வருடாந்திர அறிக்கையின் முழுமையான விவரங்கள் கிடைக்கும் சரியான பாதை உட்பட வலை இணைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கை நகல் ஆகியவை கம்பெனியின் இணையதளம் http://www.orchidpharma.com/investors, நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட் வலைத்தளம் www.nseindia.com மற்றும் பிஎஸ்இ லிமிடெட் www.bseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)(VC/OAVM வசதி, தொலைதூர மின்னணு–வாக்களிப்பு வசதி மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கும் முகவர்) இணையதளம் www.evotingindia.com ஆகியவற்றில் உள்ளது. எந்தவொரு தகவல் தொடர்புக்கும், பங்குதாரர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கைகளை அனுப்பலாம்: investorrelations@orchidpharma.com/rta@abhipra.com. ஒருங்கிணைந்த வருடாந்திர அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பும் பணி சனிக்கிழமை, செப்டம்பர் 05 2026 அன்று நிறைவடைந்தது.

உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் பிற KYC விவரங்களை உடனடியாக பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால், பின்வரும் வழிகளை பின்பற்றி பதிவு செய்யலாம்:

- ⋆ பங்குகள் டிமேட் வடிவில் இருக்கும்பட்சத்தில் அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம்.
- ⋆ பங்குகள் காகித வடிவில் இருக்கும்பட்சத்தில், நிறுவனம் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவருக்கு ("RTA") சேவை கோரிக்கை அனுப்புவதன் மூலம்.

மின்னணு வாக்குப்பதிவு : கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 மற்றும் இந்திய நிறுவன செயலாளர்களால் வழங்கப்பட்ட பொதுக் கூட்டங்களுக்கான செயலக தரநிலை ("எஸ்எஸ்–2") மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44 ஆகியவற்றின்படி, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் மற்றும் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காகவும் அதன் உறுப்பினர்களுக்கு முன்பும், வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போதும் வாக்களிக்க நிறுவனம் மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்குகிறது. வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பு மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு குறித்த விரிவான வழிகாட்டுதல்கள் கம்பெனியின் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் பின்வருவதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு சனிக்கிழமை, செப்டம்பர் 26, 2026 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்கி திங்கட்கிழமை, செப்டம்பர் 28, 2026 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நிறைவு பெறுகிறது.

மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க முடியாது மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொகுதி அதன் பிறகு NSDL–ஆல் நிறுத்தப்படும். கூடுதலாக, மின்னணு வாக்களிக்கும் வசதி வருடாந்திர பொதுக் கூட்ட நேரத்தில் கிடைக்கும், மேலும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் ஏற்கனவே வாக்களிக்காத கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த முடியும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்திய உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்கத் தகுதி பெறமாட்டார்.

கட் ஆப் தேதியான **செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 22, 2026 அன்று** உறுப்பினர்கள் பதிவேடு/வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு/ வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பிலும் வசதியை பெற உரிமை பெறுவர். அறிவிப்பு அனுப்பிய பிறகு ஆனால் வாக்குப்பதிவிற்கான கட் ஆப் தேதியான **செவ்வாய்க்கிழமை, செப்டம்பர் 22, 2026 அன்று** கம்பெனியின் பங்குகளை பெற்று உறுப்பினரான ஒருநபர் அவர்களது பயனர் ஐடியோ/டிபி ஐடி மற்றும் கிளையண்ட் ஐடி ஆகியவற்றை குறிப்பிட்டு www.evoting.nsdl.comக்கு மின்னஞ்சல் அனுப்பி உள்நுழைவு ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம் அல்லது எங்களின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்கள் (ஆர்டிஏ), மெசர்ஸ் அபிபுரா கேபிடல் லிமிடெட், மின்னஞ்சல் முகவரி: rta@abhipra.com–ல் அணுகலாம். கட் ஆப் தேதியன்று உறுப்பினராக இல்லாத நபர் இந்த அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே என கருத வேண்டும்.

வைப்பாளர்கள் அதாவது CDSL மற்றும் NSDL மூலம் உள்நுழைவது தொடர்பான தொழில்நுட்ப சிக்கல்களுக்கு டிமேட் முறையில் பத்திரங்களை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்களுக்கான உதவி மையம் குறித்த விவரங்கள்:

லாகின் வகை	உதவி மைய விவரங்கள்
NSDL–ல் டிமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள்	உள்நுழைவதில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள், evoting@nsdl.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் NSDL உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது 022 4886 7000 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.
CDSL–ல் டிமேட் முறையில் பங்குகளை வைத்திருக்கும் தனிப்பட்ட பங்குதாரர்கள்	உள்நுழைவதில் ஏதேனும் தொழில்நுட்பச் சிக்கலை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள், helpdesk.evoting@cdslindia.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் CDSL உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது 1800 21 09911 என்ற கட்டணமில்லா எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

வாக்களிக்கும் செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக திரு. முத்துமரன், பங்குதாரர், M/s. முத்துமரன் & அசோசியேட்ஸ் அவர்கள் ஆராய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆராய்வாளரின் அறிக்கை மற்றும் அறிவிக்கப்பட்ட முடிவுகள் கம்பெனியின் இணையதளம் https://www.orchidpharma.com/ மற்றும் NSDL இணையதளம் https://www.evoting.nsdl.com/ல் வெளியிடப்படும். அதே சமயம், வருடாந்திர பொதுக்கூட்டம் முடிந்த பிறகு இரண்டு வேலை நாட்களுக்குள் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்ட நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட் மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டிற்கு தெரிவிக்கப்படும்.

மின்னணு மூலம் வாக்களிப்பது தொடர்பான எந்தவொரு வினவலும்/குறைகளும் கம்பெனியின் இணையதளம் investorrelations@orchidpharma.com–ல் தொடர்புகொள்ளலாம் அல்லது மெசர்ஸ் அபிபுரா கேபிடல் லிமிடெட், பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர், தொலைபேசி எண்.91 11 4239 0783,மின்னஞ்சல் முகவரி : rta@abhipra.com அல்லது NSDL–ன் 022 4886 7000 என்ற கட்டணமில்லா எண்களைத் தொடர்புகொள்ளலாம் அல்லது evoting@nsdl.com–க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
ஆர்க்கிட் பார்மா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
கபில் தயா
கம்பெனி செயலாளர் மற்றும் தகவிணக்க அதிகாரி

இடம் : குருகிராம்
தேதி : செப்டம்பர் 6, 2026

ரேபிட் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்

CIN: U60232TN2017PLC120205

பதிவு அலுவலகம்: புதிய எண்.9, பழைய எண்.5 மொர்ச்சண்ட் தெரு, சென்னை – 60001

மின்னஞ்சல்: info@rapidtransportsystems.in இணையதளம் : https://rapidfleet.in/

9வது வருடாந்திர பொதுக் கூட்டம் (AGM), மின்னணு வாக்குப்பதிவு தகவல் மற்றும் இறுதி ஈவுத் தொகை வழங்குவதற்கான பதிவுத் தேதி மற்றும் புத்தக மூடல் தேதிகள் குறித்த பொது அறிவிப்பு

'ரேபிட் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்' ("நிறுவனம்") பங்குதாரர்களின் ஒன்பதாவது (9வது) வருடாந்திர பொதுக் கூட்டம் ("AGM"), 28 ஆகஸ்ட் 2026 தேதியிட்ட AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வணிகத்தை பரிவர்த்தனை செய்ய, 25 செப்டம்பர் 2026, **வெள்ளிக்கிழமை காலை 11:30 மணிக்கு (இந்திய நேரப்படி),** காணொளி காட்சி ("VC") / பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. AGM–ன் கருதப்படும் இடமாக, புதிய எண்.9, பழைய எண்.5, கோரல் மொர்ச்சண்ட் தெரு, சென்னை – 600001, தமிழ்நாடு என்ற முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்தின் பதிவு அலுவலகம் இருக்கும்.

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்"), அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் ("SEBI") (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015 ("SEBI பட்டியல் விதிமுறைகள்"), கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகத்தின் ("MCA") செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 03/2025 மற்றும் இதே விஷயத்தில் MCA வழங்கிய முந்தைய சுற்றறிக்கைகள் ("MCA சுற்றறிக்கைகள்") மற்றும் SEBI–யின் அக்டோபர் 3, 2024 தேதியிட்ட சுற்றறிக்கை எண். SEBI/HO/CFD/CFD–PoD–2/P/CIR/2024/133 மற்றும் இதே விஷயத்தில் SEBI வழங்கிய முந்தைய சுற்றறிக்கைகளுடன் ("SEBI சுற்றறிக்கைகள்") மற்றும் அவற்றின் விதிகளுக்கு இணங்க, AGM நடைபெறும் இடத்தில் பங்குதாரர்கள் நேரில் கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை, மேலும் AGM–ஐ VC அல்லது OAVM மூலம் நடத்தலாம். எனவே, பங்குதாரர்கள் 9வது AGM–ல் VC/OAVM மூலம் கலந்துகொண்டு பங்கேற்கலாம், மேலும் அவர்கள் சட்டத்தின் பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச பங்கேற்பை கணக்கிடும் நோக்கத்திற்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

மேலும், MCA சுற்றறிக்கைகள் மற்றும் SEBI சுற்றறிக்கைகள் ஆண்டு அறிக்கை மற்றும் AGM அறிவிப்பு (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகின்றன) ஆகியவற்றின் அச்சு நகல்களை அனுப்புவதிலிருந்து தளர்வு அளித்துள்ளன. மேற்கண்ட பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 28 ஆகஸ்ட் 2026 நிலவரப்படி நிறுவனம்/வைப்புத்தொகை பங்கேற்பாளர்(கள்)/RTA/ வைப்புத்தொகையகங்களில் தங்களது மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்துள்ள அனைத்துப் பங்குதாரர்களுக்கும் 2025–2026 நிதியாண்டிற்கான AGM அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கையின் மின்னணு நகல்கள்/இணைய இணைப்பு (web–link) ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்ளவும். குறித்த அறிவிப்பைப் பெறாத அல்லது 2025–2026 நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கையுடன் AGM அறிவிப்பின் அச்சு நகலைப் பெற விரும்பும் பங்குதாரர்கள், நிறுவனத்தின் RTA–வான பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்–க்கு **ivote@bigshareonline.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்பலாம்.

9வது AGM–ன் அறிவிப்பு மற்றும் 2025–2026 நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை நிறுவனத்தின் இணையதளமான **https://rapidfleet.in/,** பங்குச் சந்தையின் இணையதளமான நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் (**www.nseindia.com**) மற்றும் பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளமான (**https://ivote.bigshareonline.com**) ஆகியவற்றிலும் கிடைக்கிறது, மேலும் இந்தத் தளங்களிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஈவுத்தொகை: நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 123–ன்படி, 28 ஆகஸ்ட் 2026 அன்று நடைபெற்ற இயக்குநர் குழு கூட்டத்தில், 2025–2026 நிதியாண்டிற்கான இறுதி ஈவுத்தொகையாக முகமதிப்பு ₹10/– கொண்ட ஒவ்வொரு சமபங்குக்கும் ₹1.20/– (ரூபாய் ஒன்று மற்றும் இருபது காசுகள் மட்டும்) (அதாவது 12% ஈவுத்தொகை) வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது நடைபெறவுள்ள வருடாந்திர பொதுக் கூட்டத்தில் (AGM) பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது. இந்த இறுதி ஈவுத்தொகையை வழங்குவதற்கான பதிவுத் தேதியாக **வெள்ளிக்கிழமை, 18 செப்டம்பர், 2026** நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் பிரிவு 91–ன் விதிகளின்படி, AGM மற்றும் இறுதி ஈவுத்தொகை அறிவிக்கப்பட்டால் அதை வழங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக, நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவு மற்றும் பங்கு மாற்றுப் புத்தகங்கள் **சனிக்கிழமை, 19 செப்டம்பர் 2026 முதல் வெள்ளிக்கிழமை, 25 செப்டம்பர் 2026 வரை** (இரண்டு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும் என மேலும் அறிவிக்கப்படுகிறது.

AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களிலும் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்ய, நிறுவனம் தனது அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்கியுள்ளது. கூடுதலாக, AGM–ன் போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்குகிறது. இதற்காக, இந்த AGM–க்கான மின்னணு வாக்குப்பதிவு சேவைகள் மற்றும் காணொளி காட்சி (VC)/ பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) வசதியை வழங்க பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை நிறுவனம் நியமித்துள்ளது. இதற்கான விரிவான நடைமுறை AGM அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

SEBI பட்டியல் விதிமுறைகளின் ஒழுங்குமுறை 44 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாக) விதிகள், 2014–ன் விதி 20 உடன் இணைந்து படிக்கப்படும் சட்டத்தின் பிரிவு 108 ஆகியவற்றிற்கு இணங்க, **வெள்ளிக்கிழமை, 18 செப்டம்பர், 2026** ஆகிய கட்–ஆப் தேதி/ பதிவுத் தேதியன்று காகித வடிவிலோ அல்லது மின்னணு (dematerialised) வடிவிலோ பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், 9வது AGM–ன் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்கள் மீது பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்–ன் மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் AGM நடைபெறும் இடத்தைத் தவிர வேறு ஒரு இடத்திலிருந்து (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பின்வருவன தெரிவிக்கப்படுகின்றன:

(i) 9வது AGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வணிகங்களை மின்னணு வாக்குப்பதிவு மூலம் பரிவர்த்தனை செய்யலாம்.

(ii) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **செவ்வாய்க்கிழமை, 22 செப்டம்பர், 2026 காலை 09:00 மணிக்கு (இந்திய நேரப்படி)** தொடங்கும்.

(iii) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு **வியாழக்கிழமை, 24 செப்டம்பர், 2026 மாலை 05:00 மணிக்கு** (இந்திய நேரப்படி) முடிவடையும்.

(iv) மின்னணு வாக்குப்பதிவுக்கான தகுதியைத் தீர்மானிப்பதற்கும், இறுதி ஈவுத்தொகையை வழங்குவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட கட்–ஆப் தேதி/பதிவுத் தேதி **வெள்ளிக்கிழமை, 18 செப்டம்பர், 2026** ஆகும்.

அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று நிறுவனத்தின் பங்குதாரராகும் எந்தவொரு நபரும் மற்றும் கட்–ஆப் தேதி/பதிவுத் தேதியான வெள்ளிக்கிழமை, 18 செப்டம்பர், 2026 அன்று பங்குகளை வைத்திருப்பவர்கள், **info@rapidtransportsystems.in** அல்லது **ivote@bigshareonline.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கையை அனுப்பி பயனர் ஐடி (User ID) மற்றும் கடவுச்சொல்லைப் (Password) பெறலாம். இருப்பினும், ஒரு நபர் ஏற்கனவே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவுக்குப் பதிவு செய்திருந்தால், வாக்குகளைப் பதிவு செய்ய ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தலாம்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வசதி தொடர்பான அனைத்து குறைகள் அல்லது சந்தேகங்கள் அல்லது AGM–ல் கலந்துகொள்வது தொடர்பான பிரச்சனைகளை பிக்ஷேர் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடம் தெரிவிக்கலாம் அல்லது **info@rapidtransportsystems.in/ ivote@bigshareonline.com** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது 1800225422 (கட்டணமில்லா எண்) என்ற எண்ணிற்கு அழைக்கலாம். பங்குதாரர்கள் **cs@rapidtransportsystems.in** என்ற மின்னஞ்சல் முகவரியிலும் நிறுவனத்திற்கு எழுதலாம்.

I. வாக்களிக்கத் தகுதியுள்ள பங்குதாரர்கள் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளலாம்:

a) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொகுதி வியாழக்கிழமை, 24 செப்டம்பர், 2026 அன்று மாலை 5.00 மணிக்கு முடக்கப்படும், மேலும் ஒரு தீர்மானத்தின் மீது பங்குதாரர் வாக்களித்தவுடன், அந்தப் பங்குதாரர் பின்னர் அதை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்;

b) AGM–க்கு முன்னதாகத் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்த பங்குதாரர்கள் AGM–லும் கலந்துகொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க அவர்களுக்கு உரிமை இல்லை; மற்றும்

c) கட்–ஆப் தேதி/பதிவுத் தேதியின்படி, உறுப்பினர்களின் பதிவேடு அல்லது வைப்புத்தொகையகங்களால் பராமரிக்கப்படும் பயனாளி உரிமையாளர்களின் (Beneficial Owners) பதிவேட்டில் யாருடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அந்த நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்.

d) ஒரு பங்குதாரர் இரண்டு முறைகளிலும் வாக்களித்தால், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் செய்யப்பட்ட வாக்குப்பதிவே மேலோங்கும் மற்றும் AGM–ன் போது செய்யப்படும் மின்னணு வாக்குப்பதிவு செல்லாததாகக் கருதப்படும்.

II. மின்னணு வாக்குப்பதிவு முடிவுகள், பட்டியல் விதிமுறைகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறுவனத்தின் இணையதளமான (**https://rapidfleet.in/**) மற்றும் பங்குச் சந்தையின் இணையதளமான (**www.nseindia.com**) ஆகியவற்றிலும் நிறுவனத்தால் அறிவிக்கப்படும்.

குழு சார்பாக
ரேபிட் ஃப்ளீட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
அங்கிதா குப்தா
நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 03 செப்டம்பர், 2026